## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 38/2020 | Date :02.08.2022 | PW4 |
|---|---|---|
| Name: முத்து | S/o. பாப்பன் | |
| Evidence Recorded Time: 11.15 A.M. to 11.30 A.M | | |

**2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

சந்திரன் என்பவர் பக்கத்து நிலத்துகாரர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சந்திரன் நிலத்தை சீர்செய்து ஓட்டிக்கொண்டிருக்கும்போது அவர் நிலத்தை சீர்செய்யவிடாமல் கேட் போட்டு பூட்டிவிட்டார்கள். மேற்படி நிலத்தை ஆட்கள் வேலை செய்யும்போதே கேட் போட்டு பூட்டிவிட்டார்கள் என்ற சங்கதியை என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி நிலத்தில் வடக்குபுறத்தில் சமாதி உள்ளதா என்றால் உள்ளது. சமாதியின் ஓரத்தில் கிழக்கு மேற்காக பாதை உள்ளதா என்றால் உள்ளது. அந்த பாதைதான் வண்டி பாதை ஆகும். அந்த பகுதியில்தான் சின்னகேட் உள்ளது என்றால் அது சமீபத்தில்தான் போடப்பட்டது. நிலத்தில் திருட்டு போவது சம்மந்தமாகதான் இந்திரஜித் பெரியகேட் போட்டது உண்மைதான். இந்திரஜித்திடம் ஒரு சாவியும், எங்கள் ஓனரிடம் ஒரு சாவியும் உள்ளது என்றால் சரிதான். அந்த சாவி தற்போது என்னிடம் தான் உள்ளது. ஆனால் வேறு பூட்டு போட்டு பூட்டப்பட்டுள்ளது, அதற்கான சாவி இல்லை. 15 ஆண்டுகளாக எனது ஓனர் விவசாயம் செய்துவருவரை ஒரு போதும் இந்திரஜித் செய்ததில்லை என்றால் சரிதான். தென்னை கன்றுகளுக்கு நீர்பாய்ச்சுவதற்கும், விவசாயத்திற்கு பயன்படுத்தவும் எனது ஓனர் ஒரு தண்ணீர் தொட்டி கட்டினார். அனைத்து வேலைகளும் முடிந்து தண்ணீர் எடுத்து வரும் சமயத்தில் கேட்டை இந்திரஜித் பூட்டு போட்டு பூட்டிவிட்டார். மேற்படி தண்ணீர் தொட்டி விவசாய பயன்பாட்டிற்கு கட்டப்படாமல், பிவிசி பைப் கம்பெனி கட்டுவதற்காக தண்ணீர் தொட்டி கட்டினார் என்றால் சரியல்ல. பெரிய கேட்டின் பாதை வழியாக பைப் லைன் செல்கிறது என்றாலும் அதிக பாரமுள்ள பெரிய வாகனத்தை ஓட்டிச் செல்வதால் அந்த பைப் லைன் சேதம் அமையும் என்பதால்தான் கேட் போடப்பட்டுள்ளது என்று சொன்னாலும் சரியல்ல. பெரிய கேட்டி வழியாக நிலத்திற் செல்லாமா என்றால் செல்லலாம். சின்ன கேட் வழியாக டிராக்டர் ஓட்டிச் செல்லமுடியாது. வழக்கு எப்போது தாக்கல் செய்தார்கள் என்றால் இரண்டாண்டுகள் இருக்கும், தேதி நினைவில்லை. வழக்கு தாக்கல் செய்து எவ்வளவு நாட்கள் கழித்து சின்ன கேட் போடப்பட்டது என்றால் தேதி தெரியாது. தற்போதும் நான் தான் நிலத்தை ஓட்டி வருகிறேன் என்றால் சரிதான். வாதியின் 22 1/2 செண்ட் நிலத்தை பிரதிவாதி சேர்த்து ஓட்டிவந்ததார் என்று சொல்லியுள்ளேன், எந்த பக்கம் என்றால் ஓனர்

காட்டிலிருந்து கிழக்கு பக்கம் ஆகும். நான் சொல்வது போல பிரதிவாதி வாதியின் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும் வழக்கு நிலுவையில் இருக்கும்போது கேட் அமைக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனது ஓனர் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(4, 5 பிரதிவாதிகளின் வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை சிறிது நேரத்திற்க்கு ஒத்திவைக்கப்படுகிறது)

Evidence Recorded Time: 11.45 A.M. to 11.50 A.M

**4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சி சொல்ல அழைப்பாணை வரவில்லை. வாதி அரசாங்கத்திற்கு எதிராக என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. வாதி எனக்கு உறவினர் இல்லை. அவரிடம் நான் 15 ஆண்டுகளாக வேலை செய்து வருகிறேன். வாதி எத்தனை முறை நிலத்தை அளக்க மனு கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு வழக்கு விவரம் எதுவும் தெரியாது என்றாலும் அவரிடம் 15 ஆண்டுகளாக வேலை செய்து வருவதால் அவருக்கு ஆதவராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ஒம்/–PW4,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.